**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.1297/2019**

Deposition of **PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சின்னான்டி | **Age** | : | 59/2026 |
| **Father's Name** | : | திரு. சங்கரலிங்கம் | **Religion** | : | இந்து |
| **Village** | : | மீனாட்சிபுரம் | **Calling** | : | பூ வியாபாரி |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19/06/2026.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2) எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிறுவன வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். எதிரி சொக்கநாதபுரத்தில் இருந்தபோது எனக்கு பழக்கம் தற்போது ஆண்டிபட்டி அருகில் குடியிருந்து வருகிறார். எதிரி எனக்கு எவ்வாறு பழக்கம் என்ற விபரத்தை நான் வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளேன். நான் 2018 ஆம் வருடம் மோட்டாருக்கு மின் இணைப்பு வாங்குவதற்காக முயற்சி செய்தேன் என்றால் நான் எதிரியிடம் கொடுக்கவில்லை தட்கலில் வாங்கினேன்.

3) தேனியைச் சேர்ந்த மலைச்சாமி என்பவர் மூலமாக TNEP AE–ஆக வேலை செய்யும் ராஜேஷ் என்பவர் மூலமாகத்தான் எதிரியை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தனியாக மின் இணைப்பு பெற்றால் செலவாகும் என கருதி என்னிடம் இருந்த மின் இணைப்பை மோட்டாருக்கு பயன்படுத்திக் கொள்ள எதிரி மூலமாக முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல.

4) அன்னஞ்சியை சேர்ந்த சிவஞானம் என்பவர் மூலமாகத்தான் எதிரிக்கு ரூபாய் 48,000/- பணம் கொடுத்தேன் என்றால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. நான் சிவஞானம் என்ற ஒருவர் மூலமாகத்தான் பணம் கொடுத்தேன் என்றும் வழக்கிற்காக அதை மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) ஜி.உசிலம்பட்டி என்ற ஊரைச் சேர்ந்த கருப்பண்ணன் என்பவரது மின் இணைப்பை நான் எனக்கு பெறுவதற்காக ரூபாய் இரண்டு லட்சத்திற்கு பேசினேன் என்றும் மேற்கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் நபர்களுக்கு ரசீது இல்லாமல் கொடுக்கும் பணத்திற்காக ரூபாய் 50,000/- கொடுப்பதற்காகத்தான் 48,000/- பணத்தை எதிரியிடம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

6) எந்த தேதியில் எதிரி பணம் கேட்டார் நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. எதிரி என்னிடம் பணம் பெறவில்லை என்பதால்தான் என்னால் தேதி குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. நான் தோட்டத்தை விற்பனை செய்து விட்டேன் என்றும் எனக்கு மின் இணைப்பு தேவையில்லை என்று சொல்லி நான் கொடுத்த பணத்தை எதிரி மூலமாக திருப்பி கேட்டு தொந்தரவு செய்தேன் என்றால் சரியல்ல.

7) நான் எதிரியிடம் பணத்தை வாங்கி கொடுக்கும்படி கேட்டு அவரது வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல நான் கொடுத்த பணத்தைதான் திருப்பி கேட்டேன். எதிரியிடம் பணத்தைக் கேட்டு நான் அசிங்கப்படுத்தினேன் என்றும் அதனால் எதிரி மற்ற நபர்களிடம் கொடுத்த பணத்தை வாங்கி கொடுப்பதாக சொல்லி தனது காசோலையை பொறுப்புக்காக கொடுத்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல.

8) உண்மையில் எனக்கும் எதிரிக்கும் எந்த வரவு செலவு இல்லை என்றும் எனக்கும் சிவஞானம் என்பவருக்குதான் வரவு செலவு என்று சொன்னால் சிவஞானம் என்பவரை எனக்கு யாரென்று தெரியாது. எதிரியை மட்டுமே எனக்கு தெரியும் என்பதால் எதிரியை தொந்தரவு செய்து இந்த காசோலையை வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு எதிரி என்னை அணுகி வழக்கறிஞர் அறிவிப்பு ஏன் இவ்வாறு பொய்யான விபரங்கள் கூறி அனுப்பினீர்கள் என்று கேட்டாரா என்றால் இன்றுவரை அவர் என்னிடம் கேட்கவில்லை.

9) மேற்கொண்டு பணத்தை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று மிரட்டுவதற்காகதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும் நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க மாட்டேன் என்று சொன்னதால்தான் எதிரி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்ததாக சொல்லும் பணம் சட்டப்படி திருப்பி கேட்கக்கூடிய கடன் அல்ல என்றும் நான் தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு கொடுத்த லஞ்ச பணம் என்று சொன்னால் சரியல்ல.

10) நான் 50,000/- பணத்தை எதிரிக்கு வங்கி கணக்கில் இருந்து எடுத்துக் கொடுத்தேனா என்றால் இல்லை வீட்டில் இருந்து கொடுத்தேன் விவசாயத்திற்கு வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொடுத்தேன் நண்பர் என்பதால் கொடுத்தேன். நான் மேற்படி பணத்தை எதிரிக்கு கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதிய வருமானம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.06.19 18:34:27 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**